## கு.பி. திலகவதியின் கவிதை எழுதிய நாள் 18-02-1979

அண்ணனின் அன்புதோய் கவிமடல் கண்டேன்!
தைத்திங்கள் சென்ற மறுதிங்களில்,
கரும்பினும் இனிய அமிழ்தெனும்;
பொங்கலென சுவைகண்டேன்!

சீர்திருத்தக் கடிதம் கண்ட அன்று எந்தைக்கு
வந்த ஐயம் வளர்பிறையாக, வளர்ந்தது!
கவிமடல் கண்டதும், இலக்கியத்தில் மகனும்,
மூழ்கிடுவானோ என்றஞ்சி வேண்டாம்,
இந்த விளையாட்டு என்றே அறிவுரைத்தார்!

தேர்வு முடிந்தபின் இத்துறையில் தேர்ந்திடலாம்;
எனத் தேற்றுகின்றார்! அண்ணனைத் தொடர்ந்து,
தங்கை நானும் இத்துறையில் தேர்ந்திடுவேன்!

'நாள்கள்' என்பது தவறென அறிந்தேன் அண்ணன் மூலம்!
ஆனால், 'நாள்கள்' என்பதே சரியென அறிந்தேன் நூல்கள் மூலம்!
'துவக்கம்' என்பது சரியா? 'தொடக்கம்' என்பது சரியா?
உண்மையறிய விளக்கம் தருக!

முதலின் கண்ட சீர்திருத்தம், பின்னால் காணாமல் திகைத்தேன்!
பெரியோர் அனைவருக்கும் பணிவான வணக்கமுறைத்தேன்!
உடன் மடல் வரையாமைக்கு மன்னித்து, அனைவர் நலங்கூறும்,
நற்செய்தி மடல் காண விரும்புகிறேன்!

சிறியவள் உரைத்த கவிதையிலே, தவறிருந்தால் பொருத்தருள்க!

- பணிவுடன், அண்ணனிடம் நீங்கா அன்பு கொண்ட,

திலகவதி